www.tamilarangam.net

# குழந்தைகளும் இலங்கையின் உள்நாட்டுப் போரும்

*Human Rights Watch invites you*

**Sunday, December 05, 2004, 3:30pm – 5.30 pm**
**Khalili Lecture Theatre, School of Oriental and African Studies,**
**University of London**
**Thornhaugh Street London WC1**
( Nearest tube: Russell Square )

21 ஆண்டுகளாக இலங்கையில் தொடரும் உள்நாட்டுப் போர் வட கிழக்கில் வாழும் குழந்தைகள் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. 60,000 உயிர்களைப் பலிகொண்ட இப்போரின் குரூர வன்முறைச் சம்பவங்கள் பலவற்றை இக்குழந்தைகள் நேரில் முகங் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு உள்ளது. பல சிறார்கள் தங்கள் பெற்றோரை அல்லது குடும்ப உறுப்பினர்களை இழந்துள்ளனர் மற்றும் பலர் தங்களது வதிவிடங்களில் இருந்து இடம்பெயர நேர்ந்து உள்ளது. இக்குழந்தைகளின் கல்விக் கூடங்கள் உடைக்கப்பட்டு உள்ளன. இன்னும் பல சிறுவர்கள் போரில் நேரடியாகப் பங்கேற்று உள்ளனர்.

2002ல் யுத்த நிறுத்தத்தினால் போர்ச் சூழல் தணிந்திருந்தாலும் குழந்தைகள் படையணிக்குத் திரட்டப்படுவது நிறுத்தப்படவில்லை. ஓகஸ்ட் 2004ல் ஹியுமன் றைட்ஸ் வோட்ச் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஆய்வொன்றை மேற்கொண்டது. அவ்வாய்வின் மூலம் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் குழந்தைகளை படையணிக்கு திரட்டுவது ஆவணப்படுத்தப்பட்டு உள்ளது.

எமது ஆய்வறிக்கை பற்றியும் இலங்கையில் நடைபெறும் யுத்தம் குழந்தைகளை எவ்வாறு பாதிக்கிறது என்பது குறித்தும் நடைபெறும் விசேட கலந்துரையாடலில் ஹியுமன் றைட்ஸ் வோட்ச் உடன் இணைந்து கொள்ளுங்கள்.

**பேச்சாளர்கள் :**

**ANDY LOVE, MP for Edmonton, Secretary Sri Lanka - All Party Parliamentary Group**

**JO BECKER, Human Rights Watch**

**Representative, Tamil community**

**கருத்தரங்கிற்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறது ஹியுமன் றைட்ஸ் வோட்ச்.**

---

ஹியுமன் றைட்ஸ் வோட்ச் உலக நாடுகளில் மனித உரிமைகள் பேணப்படுகிறதா என்பதை கண்காணித்து வருகிறது. தொடர்ச்சியாக திட்டமிட்ட விசாரணைகளின் மூலம் உலகில் 70 நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை ஹியுமன் றைட்ஸ் வோட்ச் கண்காணிக்கிறது. இது ஒரு சுயாதீன பக்கசார்பற்ற அரசசார்பற்ற அமைப்பு. தனி நபர்களும் சர்வதேச நிதி அமைப்புகளுமே இதற்கு நிதியுதவி வழங்குகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்